கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.

முன்னிலை: திரு.ஜி.சரண்,**B.L., P.G.Dip.in Env.Law.,**

கூடுதல் மாவட்ட நீதிபதி, திண்டுக்கல் (முழு கூடுதல் பொறுப்பு)

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25 ஆம் நாள் வெள்ளிக்கிழமை.

இடைக்கால மனு எண்**.3/2025**

-உள்-

அசல் வழக்கு எண்-20/2020

முருகன் ... மனுதாரர்/1 ம் பிரதிவாதி

// எதிர் //

பழனிவேல் ... எதிர்மனுதாரர்/ வாதி

இந்த இடைக்கால மனு கடந்த 22.4.2025 ம் தேதியன்று இந்த நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் பி.சுரேஷ் பாஸ்கரன் மற்றும் டி.முத்துச்சாமி ஆகியோர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் டி.முத்தமிழ்செல்வன் மற்றும் பி.கௌசல்யா ஆகியோர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டு, வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து, இதுநாள் வரையிலும் இந்த நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்துவந்த இம்மனுவில் இன்று இந்த நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.....

உத்தரவு

1. கடந்த 04.03.2023 ம் தேதி இந்த மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்திரவினை ரத்து செய்ய 30 நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்காமல் ஏற்பட்ட காலதாமதமான 04.04.2023 முதல் 16.10.2024 ம் தேதி வரையான 563 நாட்கள் காலதாமதத்தினை மன்னித்து இந்த மனுவினை அனுமதித்து தாவா மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஒருதலைபட்ச உத்திரவாணையை ரத்து செய்ய தாக்கல் செய்துள்ள மனுவை ஏற்று தாவா வழக்கினை மேல் நடத்த உத்தரவிடக்கோரி மனுதாரர்/1 ம் பிரதிவாதியால் இம்மனுவானது காலவரையறைச் சட்டம் பிரிவு 5 மற்றும் உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுவின் சுருக்கம்</u>:

நான் இந்த மனுவின் மனுதாரர்/1ம் பிரதிவாதி ஆவேன். அசல் வழக்கினை என் மீது எதிர்மனுதாரர்/வாதி பொய்யான காரணங்களை கூறி தாக்கல் செய்துள்ளார். இந்த மனுதாரர், எதிர்மனுதாரர்/வாதியிடம் எந்த ஒரு தொகையும் பெறவில்லை. மேலும் எந்த ஆவணமோ, புரோநோட்டோ கொடுக்க கிடையாது. மனுதாரர் அசல் வழக்கில் ஆஜராகி வழக்கு நடத்திக்கொண்டிருந்த போது கடந்த 2023 பிப்ரவரி மாத வாக்கில் மஞ்சள்காமாலை நோய் ஏற்பட்டு மிகுந்த உடல் நல குறைவு ஏற்பட்டுவிட்டது. கேரளா மாநிலத்தில் எர்ணாகுளம் அருகில் உள்ள வாழப்பாடிக்கு சென்று நாட்டு வைத்தியரிடம், நாட்டு வைத்தியம் பார்த்து தொடர் சிகிச்சையில் இருந்து வந்ததால் இந்த மனுதாரரால் அசல் வழக்கினை நடத்த முடியவில்லை. இந்நிலையில் அசல் வழக்கில் வா.சா.1 சாட்சியை குறுக்குவிசாரனை செய்யவில்லை என்றும், இந்த மனுதாரரை அழைத்த போது ஆஜராகவில்லை என்றும் கூறி கடந்த 24-02-2023ம் தேதி இந்த மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்திரவு பிறப்பித்து பின்பு கடந்த 04-03-2023ம் தேதி ஒருதலைபட்ச தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை வழங்கியுள்ளது. PW1 சாட்சியை குறுக்குவிசாரனை செய்ய வழக்கறிஞர் அவர்கள் அலுவலகத்திற்கு வரச்சொல்லியிருந்தபோது, இந்த மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் வழக்கறிஞரை சந்திக்க முடியவில்லை. தற்போது எதிர்மனுதாரர் பெற்ற தீர்ப்பாணையின் பேரில் நிறைவேற்று மனு தாக்கல் செய்து அதில் இந்த மனுதாரருக்கு நீதிமன்ற அறிவிப்பு வந்ததாலும், தற்போது உடல் நிலை சுமாராக இருப்பதால் தற்போது வழக்கறிஞரை சந்தித்து கடந்த 04-03-2023ம் தேதிஇந்த மனுதாரருக்கு எதிராக பிறப்பித்த ஒரு தலைபட்ச தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்ய வேண்டி இந்த மனுவை தாக்கல் செய்கின்றார். இந்த வழக்கினை நடத்தாதது வேண்டு மென்றே ஏற்பட்டதல்ல. தெய்வாதீனமாக ஏற்பட்ட ஒன்றே ஆகும். அசல் வழக்கில் இந்த மனுதாரருக்கு நல்ல எதிர்வாதம் உள்ளது. ஆகையால் இந்த மனுதாரருக்கு எதிராக கடந்த 04-03-2023ம் தேதி ஏற்பட்ட ஒருதலைப்பட்ச தீர்ப்பாணையை உத்திரவினை ரத்து செய்ய 30 நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்காமல் ஏற்பட்ட கால தாமதமான 04-04-2023ம் தேதி முதல் 16-10-2024ம் தேதி வரையான 563 நாட்கள் கால தாமதத்தினை மன்னித்து, இந்த மனுவினை அனுமதித்து, தாவா மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஒருதலைபட்ச உத்திரவாணையை ரத்து செய்ய தாக்கல் செய்துள்ள மனுவை ஏற்று தாவா வழக்கினை மேல் நடத்த

உத்திரவிட வேண்டியது அவசியமாகவும் நியாயமாகவும் இருக்கிறது. இல்லாவிட்டால் இந்த மனுதாரருக்கு ஈடு செய்யமுடியாத கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டுவிடும். எனவே மனுப்படி உத்தரவாகவேண்டும்.

3. எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்உரையின் சுருக்கம் :

மனு சங்கதிகள் தவறானவது. இம்மனு சட்டப்படியும், நியாயப்படியும், தர்மப்படியும் விசாரணைக்கு உகந்தது அல்ல. இந்த எதிர்மனுதாரர் /வாதியை குறுக்கு விசாரணை செய்ய அவரது வழக்கறிஞர் வரசொல்லியிருந்தார் என்றும், உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் சந்திக்க முடியவில்லை என்றும், தீர்ப்பாணையின் பேரில் நிறைவேற்றுதல் மனு தாக்கல் செய்து, நோட்டீஸ் வந்தபிறகுதான், தற்போது உடல்நிலை சுமாராக இருப்பதால் வழக்கறிஞரை சந்தித்து விபரம் அறிந்து ஒருதலைபட்ச தீர்ப்பாணை ரத்து செய்ய மனு தாக்கல் செய்திருப்பதாக சொல்லியிருப்பதை மனுதாரர்/1ம் பிரதிவாதியே நிரூபிக்க வேண்டும். இந்த எதிர்மனுதாரர் /வாதி மேற்படி அசல் வழக்கில் 2-12-2022ம்தேதி முதல்நிலை சாட்சியம் அளித்து பின்னிட்டு இந்த மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய 09-12-2022, 16-12-2022, 23-12-2022, 07-01-2023, 7-02-2023, மற்றும் 17-02-2023 ஆகிய தேதிகளில் வாய்தா வழங்கப்பட்டிருந்தது. இதில் 23-12-2022ம்தேதி மனுதாரர் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டதின் அடிப்படையில் குறுக்கு விசாரணை செய்ய ஒத்தி வைக்கப்பட்டது. இருந்தும், அதன்பின்னிட்டு வந்த வாய்தா நாட்களில் அவர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யாததால் 17-02-2023 ம் தேதி ஒருதலைபட்ச உத்தரவு பிறப்புவிக்கப்பட்டு அதன்பின்னர் 4-03-2023ம் தேதி ஒருதலைபட்ச தீர்ப்பாணையும் பிறப்பிக்கப்பட்டுவிட்டது. மேற்படி ஒருதலைபட்ச தீர்ப்பாணைக்கு பிறகு ஓராண்டு கழித்துதான் இந்த எதிர்மனுதாரர்/வாதி நிறைவேற்று மனுவை தாக்கல் செய்துள்ளார். அந்த நிறைவேற்று மனுவில் நோட்டீஸ் சார்பு செய்யப்பட்டபிறகு 17-10-2024ம் தேதிதான் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட் நாளிலிரந்து ஒன்றறை வருடம் வரை இந்த மனுதாரர் /1ம் பிரதிவாதி உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்பதற்கான ஆவணங்கள் எதையும் இம்மனுவுடன் தாக்கல் செய்யவில்லை. தனக்கு என் நோய் எற்பட்டது என்ற விபரத்தையும் அதற்கு மருத்துவரிடம் சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்ற விபரத்தையும்

காலதாமதத்தற்குரிய சட்டரீதியான காரணங்களை மனுதாரர் குறிப்பிடவில்லை. பொய்யான சங்கதிகளை தெரிவித்து தாவா கடன் தொகையை வசூல் செய்வதில் இந்த எதிர்மனுதாரரை அலைகளிப்பு செய்யவேண்டுமென்ற தீய எண்ணத்துடன் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். நிறைவேற்று மனு அதில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை பொது ஏலத்தில் விடுவதற்கான நிலையில் இருந்து வருகிறது. அதனை தவிர்ப்பதற்காக பொய்யான காரணங்களைக் கூறி மிகுந்த காலதாமதத்துடன் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். எனவே இம்மனு இந்த எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

4. இரு தரப்பும் கேட்கப்பட்டது. இனி இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டியது இந்த மனு அனுமதிக்கத்தக்கதா**?** இல்லையா**?** என்பதேயாகும்.

5. மனுவானது காலவரையறைச் சட்டம் பிரிவு 5 மற்றும் உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.

6. இரு தரப்பு வாதுரை கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர் தரப்பில் மனுதாரருக்கு கடந்த 2023 பிப்ரவரி மாத வாக்கில் மஞ்சள்காமாலை நோய் ஏற்பட்டு கேரளா மாநிலத்தில் உள்ள வாழப்பாடிக்கு சென்று நாட்டு வைத்தியம் பார்த்து தொடர் சிகிச்சையில் இருந்து வந்ததால் இந்த மனுதாரரால் அசல் வழக்கினை நடத்த முடியவில்லை என்றும், இந்நிலையில் கடந்த 24-02-2023ம் தேதி இந்த மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்திரவு பிறப்பித்து பின்பு கடந்த 04-03-2023ம் தேதி ஒருதலைபட்ச தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை வழங்கியுள்ளதென்றும், இந்த தவறுகை வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், தெய்வாதீனமாக ஏற்பட்ட ஒன்று என்றும், அசல் வழக்கில் இந்த மனுதாரருக்கு நல்ல எதிர்வாதம் உள்ளது. ஆகையால் இந்த மனுதாரருக்கு எதிராக கடந்த 04-03-2023ம் தேதி ஏற்பட்ட ஒருதலைப்பட்ச தீர்ப்பாணையை உத்திரவினை ரத்து செய்ய மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 563 நாட்கள் கால தாமதத்தினை மன்னித்து, இந்த மனுவினை அனுமதித்து, தாவா மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஒருதலைபட்ச உத்திரவாணையை ரத்து செய்ய தாக்கல் செய்துள்ள மனுவை ஏற்று தாவா வழக்கினை மேல் நடத்த உத்திரவிட வேண்டுமென்று எடுத்துரைத்துள்ளார்.

எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் இந்த எதிர்மனுதாரர் /வாதி மேற்படி அசல் வழக்கில் 2-12-2022ம்தேதி முதல்நிலை சாட்சியம் அளித்து பின்னிட்டு இந்த மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய பல வாய்தாக்கல் அளிக்கப்பட்டு, அதன்பின்னர் 4-03-2023ம் தேதி ஒருதலைபட்ச தீர்ப்பாணையும் பிறப்பிக்கப்பட்டுவிட்டதென்றும் மேற்படி ஒருதலைபட்ச தீர்ப்பாணைக்கு பிறகு ஓராண்டு கழித்துதான் இந்த எதிர்மனுதாரர்/வாதி நிறைவேற்று மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், அந்த நிறைவேற்று மனுவில் நோட்டீஸ் சார்பு செய்யப்பட்டபிறகு 17-10-2024ம் தேதிதான் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட் நாளிலிருந்து ஒன்றறை வருடம் வரை இந்த மனுதாரர் /1ம் பிரதிவாதி உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்பதற்கான ஆவணங்கள் எதையும் இம்மனுவுடன் தாக்கல் செய்யவில்லை என்றும், தனக்கு என்ன நோய் எற்பட்டது என்ற விபரத்தையும், அதற்கு மருத்துவரிடம் சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்ற விபரத்தையும் காலதாமதத்தற்குரிய சட்டரீதியான காரணங்களை மனுதாரர் குறிப்பிடவில்லை என்றும், நிறைவேற்று மனு அதில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை பொது ஏலத்தில் விடுவதற்கான நிலையில் இருந்து வருகிறது என்றும் அதனை தவிர்ப்பதற்காக பொய்யான காரணங்களைக் கூறி மிகுந்த காலதாமதத்துடன் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும் எனவே மனுவை இந்த எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டுமென்று எடுத்துரைத்துள்ளார்.

கடந்த 4-03-2023ம் தேதி வா.சா.1ஐ குறுக்க விசாரணை செய்யாததால் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பாணை ரத்து செய்யவேண்டுமென்று மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேற்படி தேதியிலான தவறுகை என்பது தனக்கு மஞ்சள் காமாலை நோய் ஏற்பட்டு வெளி மாநிலத்திற்குச் சென்று மருத்துவம் செய்த வந்ததாகவும் எனவே இந்த தவறுகை வேண்டுமென்றோ விரும்பியோ ஏற்பட்டதல்ல என்றும், தெய்வாதீனமாக ஏற்பட்ட இந்த தவறுகையை மன்னித்து தனக்கெதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச தீர்ப்பாணையை ரத்து செய்ய மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து இம்மனுவை அனுமதித்து உத்தரவிடக்கோரி மனுதாரர் தரப்பில் வாதம் முன்வைக்கப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. எதிர்மனுதாரர் தரப்பில், மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள்

பொய்யானது என்றும் மனுதாரருக்கு நோய் ஏற்பட்டது என்பதற்கான ஆவணங்கள் எதையும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்றும் காலதாமதத்திற்கான சட்டரீதியான விளக்கங்கள் எதையும் மனுவில் தெரிவிக்கவில்லை என்றும் மேலும் வழக்கை இழுத்தடிக்கும் நோக்கில் மனுதாரர் செயல்படுவதாகவும் எனவே இம்மனுவினை இந்த எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டுமென்று வாதம் முன்வைத்திருப்பதைக் காணமுடிகின்றது. இந்நிலையில் மனுதாரர் அசல் வழக்கில் கடந்த 4-03-2023 மனுதாரருக்கு எதிராக ஒருதலைப்பட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பது ஆவணங்களின் வாயிலாக அறிய முடிகிறது. இம்மனுவானது 563 நாட்கள் காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதை காணமுடிகிறது. இதற்கு மனுதாரர் கூறும் காரணமாவது அவருக்கு மஞ்சள் காமாலை நோய் ஏற்பட்டு வெளிமாநிலத்தில் மருத்துவம் பார்த்து வந்ததாக குறிப்பிட்டுள்ளதையும் காணமுடிகிறது. இந்நிலையில், இந்த மனு மற்றும் வழக்கின் சந்தர்ப்ப சூழ்நிலைகளை பரிசீலனை செய்து பார்க்கும் போது மனுதாரருக்கு அவரது வழக்கை எடுத்துரைக்க ஒரு சந்தர்ப்பம் வழங்குவதே நீதியின்பால் உகந்ததாக இருக்கும் என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. இருந்தபோதும் இந்த மனுவினால் எதிர்மனுதாரருக்கு ஏற்பட்ட மனஉளைச்சல் மற்றும் செலவினங்களை ஈடு செய்யும் வகையில் இம்மனுவினை செலவுத்தொகையுடன் அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, அவ்வாறே இந்த பிரச்சினைக்கு தீர்வு காண்கிறது.

முடிவாக, இம்மனுவின் மனுதாரர், எதிர்னுதாரருக்கு இம்மனுவின் செலவுத்தொகையாக ரூ.1,000/-ஐ வரும் 29.04.2025.ம் தேதிக்குள் செலுத்தி-வைக்கும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்றும் தவறும் பட்சத்தில் இம்மனு தள்ளுபடி ஆகிவிடும் என்று உத்தரவிடப்படுகிறது. அழைக்க வாய்தா 29.04.2025.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25 ஆம் நாளான இன்று திறந்த மன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

G SARAN
Digitally signed by G SARAN
Date: 2025.04.25 11:19:00 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
திண்டுக்கல்(மு.கூ. பொ).

<u>இரு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u> இல்லை.

G SARAN

Digitally signed by G SARAN
Date: 2025.04.25 11:19:12 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
திண்டுக்கல்(மு.கூ. பொ).